செய்தி வெளியீடு எண் : 2133 நாள் : 25.10.2023

# செய்தி வெளியீடு

## தொன்மையான தேவாலயங்கள் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தலுக்கான நிதியுதவி வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டில் தொன்மையான தேவாலயங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தலுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2022–2023–ஆம் ஆண்டு ரூ.6.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. 2023–2024–ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கென நிதி உயர்த்தப்பட்டு ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் சென்னை, தலைமைச்செயலகத்தில் இன்று (25.10.2023), இத்திட்டத்தின்கீழ் நிதி உதவிக்கான முதல் தவணை தொகைக்கான (50%) காசோலைகளை,

1. சென்னை, வெஸ்லி தேவாலயம் (ரூ.59,39,867/–),
2. செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையர் மலை தேசிய திருத்தலம் (ரூ.74,63,250/–),
3. கன்னியாகுமரி, புனித சேவியர் தேவாலயம் (ரூ.1,14,41,908/–), மற்றும்
4. திருநெல்வேலி, கால்டுவெல் நினைவு இல்ல தேவாலயம் (ரூ.51,54,975/–) ஆகிய தேவாலய நிர்வாகிகளிடம் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியின் போது அரசு செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சிறுபான்மையினர் நல இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in